. 4 பக்கங்கள் . விலை ரூ. 5

# தின தமிழ்

தினசரி காலை நாளிதழ்

DHINA TAMIL

RNI No : TNTAM/2023/85936

www.dhinatamil.com

மாற்றத்தின் ஆரம்பம்

dhinatamil

.நாகர்கோவில் பதிப்பு . 20.02.2026 . மலர் 04 . இதழ் 50. வெள்ளிக்கிழமை

dhinatamil

. NAGERCOIL EDITION . 20.02.2026 . VOL 04 . ISSUE 50. FRIDAY . 4 PAGES . Rs. 5

நிருபர்கள் தேவை

தமிழகமெங்கும் தினசரி வெளிவந்து கொண்டிருக்கும் தின தமிழ் நாளிதழுக்கு மாவட்ட வாரியாக நிருபர்கள் தேவை. நிருபராக முன் அனுபவம் உள்ளவர்கள் தொடர்பு கொள்ளலாம்.

தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி எண் :
9080728304
மின்னஞ்சல்: dhinatamil.tn@gmail.com

உங்கள் அபிமான தின தமிழ் செய்திகளை Whatsapp - ல் பின் தொடர



## நாரணாபுரம் ஊராட்சி ஒன்றியம்

### விருதுநகர் மாவட்டம்




**பிளாஸ்டிக் பொருட்களை தவிர்ப்போம்.**
**மஞ்சள் பைகளை உபயோகிப்போம்.**
**தண்ணீரையும், மின்சாரத்தையும் சிக்கனமாக பயன்படுத்துங்கள்.**
**வீட்டையும் பொது இடத்தையும் சுத்தமாக வைத்திருங்கள்.**

உயர்திரு. **மரு என்.ஓ. சுகபுத்ரா**
மாவட்ட ஆட்சித்தலைவர்,
விருதுநகர் மாவட்டம்

உயர்திரு.**வீ.கேசவதாசன்** பி.ஏ.,
இணை இயக்குநர்/திட்ட இயக்குநர் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை விருதுநகர் மாவட்டம்

உயர்திரு.**செ.முருகன்**
உதவி இயக்குநர் ( ஊராட்சிகள் மற்றும் தணிக்கை)
விருதுநகர் மாவட்டம் மேற்கு

திரு.**P.பாண்டீஸ்வரன்**
வட்டார வளர்ச்சி அலுவலர்

திருமதி.**க.மீனாட்சி**
ஆணையாளர்

திருமதி.**ஜெ.ஜெகதீஸ்வரி**
ஊராட்சி செயலர்



## சித்துராஜபுரம் ஊராட்சி ஒன்றியம்

### விருதுநகர் மாவட்டம்

**அவசர உதவிக்கு 1077-ஐ தொடர்பு கொள்ளவும்**

அரசு மருத்துவமனையை அணுகுவீர்! அச்சத்தை தவிப்பீர்!!

பேரூராட்சி பகுதியில் பிளாஸ்டிக் பொருட்கள் பயன்படுத்த தடை செய்யப்பட்டுள்ளதால் பொதுமக்கள் துனிப்பைகளை பயன்படுத்தி பேரூராட்சி நிர்வாகத்திற்கும், வியாபாரிகளுக்கும் ஒத்துழைப்பு வழங்க வேண்டுமென கேட்டுக் கொள்ளப்படுகிறது.

**துனிப்பையை கையில் எடுப்போம்!**
**பிளாஸ்டிக் பையை தவிர்த்திடுவோம்!!**
**சுற்றுச்சூழலை பாதுகாப்போம்**

உயர்திரு. **மரு என்.ஓ. சுகபுத்ரா**
மாவட்ட ஆட்சித்தலைவர்,
விருதுநகர் மாவட்டம்

உயர்திரு.**வீ.கேசவதாசன்** பி.ஏ.,
இணை இயக்குநர்/திட்ட இயக்குநர் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை விருதுநகர் மாவட்டம்

உயர்திரு.**செ.முருகன்**
உதவி இயக்குநர் ( ஊராட்சிகள் மற்றும் தணிக்கை)
விருதுநகர் மாவட்டம் மேற்கு

திரு.**P.பாண்டீஸ்வரன்**
வட்டார வளர்ச்சி அலுவலர்

திருமதி.**க.மீனாட்சி**
ஆணையாளர்

திரு.**கோ.பாஸ்கரன்**
ஊராட்சி செயலர்



## தேவர்குளம் ஊராட்சி ஒன்றியம்

### விருதுநகர் மாவட்டம்

பேரூராட்சி பகுதியில் பிளாஸ்டிக் பொருட்கள் பயன்படுத்த தடை செய்யப்பட்டுள்ளதால் பொதுமக்கள் துனிப்பைகளை பயன்படுத்தி பேரூராட்சி நிர்வாகத்திற்கும், வியாபாரிகளுக்கும் ஒத்துழைப்பு வழங்க வேண்டுமென கேட்டுக் கொள்ளப்படுகிறது.

**டெங்கு காய்ச்சலை தடுக்க**



- ஏடிஎஸ் கொசு உருவாக்குவோம் தேவையற்ற பொருட்களை அகற்றிவிடுவோம்.
- தண்ணீர் சேமித்து வைக்கும் தொட்டிகளை மூடி பாதுகாப்போம்.
- காய்ச்சல் அறிகுறி உள்ளவர்கள் அருகில் உள்ளஅரசு மருத்துவமனையை உடனடியாக அனுகவும்.




**துனிப்பையை கையில் எடுப்போம்! பிளாஸ்டிக் பையை தவிர்த்திடுவோம்!! சுற்றுச்சூழலை பாதுகாப்போம்**

உயர்திரு. **மரு என்.ஓ. சுகபுத்ரா**
மாவட்ட ஆட்சித்தலைவர்,
விருதுநகர் மாவட்டம்

உயர்திரு.**வீ.கேசவதாசன்** பி.ஏ.,
இணை இயக்குநர்/திட்ட இயக்குநர் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை விருதுநகர் மாவட்டம்

உயர்திரு.**செ.முருகன்**
உதவி இயக்குநர் ( ஊராட்சிகள் மற்றும் தணிக்கை)
விருதுநகர் மாவட்டம் மேற்கு

திரு.**P.பாண்டீஸ்வரன்**
வட்டார வளர்ச்சி அலுவலர்

திருமதி.**க.மீனாட்சி**
ஆணையாளர்

திரு.**மு.அய்யனார்**
ஊராட்சி செயலர்



## பூலாவூரணி ஊராட்சி ஒன்றியம்

### விருதுநகர் மாவட்டம்



**சுற்றுப்புறச் சூழலை தூய்மையாக வைப்போம்!**
**கொசுக்கள் உற்பத்தி ஆகாமல் தடுப்போம்!**



**டெங்கு காய்ச்சலை தடுக்க**

- ஏடிஎஸ் கொசு உருவாக்குவோம் தேவையற்ற பொருட்களை அகற்றிவிடுவோம்.
- தண்ணீர் சேமித்து வைக்கும் தொட்டிகளை மூடி பாதுகாப்போம்.
- காய்ச்சல் அறிகுறி உள்ளவர்கள் அருகில் உள்ளஅரசு மருத்துவமனையை உடனடியாக அனுகவும்.




உயர்திரு. **மரு என்.ஓ. சுகபுத்ரா**
மாவட்ட ஆட்சித்தலைவர்,
விருதுநகர் மாவட்டம்

உயர்திரு.**வீ.கேசவதாசன்** பி.ஏ.,
இணை இயக்குநர்/திட்ட இயக்குநர் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை விருதுநகர் மாவட்டம்

உயர்திரு.**செ.முருகன்**
உதவி இயக்குநர் ( ஊராட்சிகள் மற்றும் தணிக்கை)
விருதுநகர் மாவட்டம் மேற்கு

திரு.**P.பாண்டீஸ்வரன்**
வட்டார வளர்ச்சி அலுவலர்

திருமதி.**க.மீனாட்சி**
ஆணையாளர்

திருமதி.**வீ.வெள்ளைத்தாய்**
ஊராட்சி செயலர்




. 4 பக்கங்கள் . விலை ரூ. 5

# தின தமிழ்

தினசரி காலை நாளிதழ்

DHINA TAMIL

RNI No : TNTAM/2023/85936

www.dhinatamil.com — மாற்றத்தின் ஆரம்பம் — dhinatamil

.நாகர்கோவில் பதிப்பு . 20.02.2026 . மலர் 04 . இதழ் 50. வெள்ளிக்கிழமை | dhinatamil | . NAGERCOIL EDITION . 20.02.2026 . VOL 04 . ISSUE 50. FRIDAY . 4 PAGES . Rs.5

உங்கள் அபிமான
தின தமிழ்
செய்திகளை
Whatsapp - ல்
பின் தொடர

## அதிமுக கூட்டணியின் ஜோலி முடிந்தது... தவெகவின் கனவு கலைந்தது

# திமுக கூட்டணியில் தேமுதிக

சென்னை, பிப்.20–

தமிழக சட்டப்பேரவைத் தேர்தலில் யாரும் எதிர்பாராத நகர்வாக திமுக கூட்டணியில் இணைந்துள்ளது தேமுதிக.

முன்னதாக, கோவை ஈஷா மையத்தில் நடைபெற்ற மகா சிவராத்திரி விழாவில் அதிமுக முன்னாள் அமைச்சர் எஸ்.பி. வேலுமணியுடன் தேமுதிக பொதுச் செயலாளர் பிரேமலதாவும் கலந்து கொண்டார். இருவரும் அருகருகே அமர்ந்து பேசிக் கொண்டனர். விழாவுக்கு வந்த மத்திய அமைச்சர்கள் ராஜ்நாத் சிங், எல்.முருகன் ஆகியோரையும் பிரேமலதா சந்தித்துப் பேசினார். இந்த நிலையில்தான், சென்னையில் திமுக தலைமையகமான அண்ணா அறிவாலயத்தில் தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலினுடன் தேமுதிக பொதுச் செயலாளர் பிரேமலதா விஜயகாந்த், பொருளாளர் எல்.கே.சுதீஷ் ஆகியோர் சந்திப்பு நிகழ்த்தினர். இந்தச் சந்திப்பின் போது துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின், மூத்த அமைச்சர்கள் சேகர் பாபு, கனிமொழி எம்.பி. உள்ளிட்டோர் இருந்தனர். இந்தச் சந்திப்பின்போது, திமுக கூட்டணியில் தேமுதிக இணைவது உறுதி செய்யப்பட்டது.



திமுக தலைவரும், தமிழக முதல்வருமான மு.க.ஸ்டாலினுடன் கூட்டணி அமைத்த பின்னர் பிரேமலதா விஜயகாந்த் கூறும்போது, “தமிழக சட்டப்பேரவைத் தேர்தலில் தேமுதிக யாருடன் கூட்டணி என்ற கேள்வி நீண்ட நாட்களாக நிலவிவந்தது. அதன்படி, திமுகவுடன் தேமுதிக கூட்டணியை உறுதி செய்துள்ளோம்.

தேமுதிக நிர்வாகிகள், தொண்டர்கள் விரும்பியடிய திமுகவுடன் கூட்டணி அமைத்துள்ளோம். தேமுதிக முதன்முறையாக திமுகவுடன் கூட்டணி அமைத்துள்ளது. 2016–லேயே இந்தக் கூட்டணி அமைந்திருக்க வேண்டும். பழம் நழுவி

## எடப்பாடிக்கு ஷாக் கொடுத்த பிரேமலதா!!

பாலில் விழும் என்று கருணாநிதி கூறியிருந்தார். ஆனால், அது இப்போது கேப்டன் இல்லாதபோது தாமதமாக நடந்துள்ளது.

மற்றபடி இந்தத் தேர்தலில் தேமுதிக எத்தனை தொகுதிகளில் போட்டியிடும், எந்தெந்த தொகுதிகளில் போட்டியிடும் போன்றவை எல்லாம் அண்ணன் ஸ்டாலின் அறிவிப்பார். இந்தக் கூட்டணி தேமுதிகவினர், பொது மக்களும் வரவேற்கும் கூட்டணியாக உள்ளது. 200–க்கும் மேற்பட்ட இடங்களில் வெற்றி பெறுவது உறுதி. ராஜ்யசபா எம்.பி. சீட் குறித்து எல்லாம் அண்ணன் ஸ்டாலின் உரிய நேரத்தில் அறிவிப்பார்” என்றார் பிரேமலதா.

இதனிடையே, முதல்வர் ஸ்டாலின் தனது எக்ஸ் தளப் பக்கத்தில், ‘தலைவர் கலைஞர் மேல் மாறாத அன்பு கொண்டவரும், எனது அன்பு நண்பருமான ‘கேப்டன்’ விஜயகாந்த் உருவாக்கிய தேசிய முற்போக்கு திராவிட கழகம், மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணியில் இணைந்திருப்பது பெருமகிழ்ச்சி அளிக்கிறது. சகோதரர் கேப்டன் உருவாக்கிய இயக்கத்தைத் தற்போது திறமையாக வழிநடத்தி வரும் பொதுச் செயலாளர் அன்புச் சகோதரி பிரேமலதா விஜயகாந்தையும், அக்கட்சியின் நிர்வாகிகளையும் வருக வருக என வரவேற்கிறேன். கருப்பு சிவப்பைக் கொடியில் தாங்கியிருக்கும் தங்களது நல்வரவு – நல்லுறவு தொடர்ந்து தமிழ்நாட்டின் உயர்வுக்குப் பங்களிக்கட்டும். திராவிட மாடல் ஆட்சி தொடரவும், தமிழ்நாடு அனைத்து வகையிலும் முன்னேறவும் இணைந்து பயணிப்போம். வெல்வோம் ஒன்றாக” என்று குறிப்பிட்டுள்ளார்.

திமுக கூட்டணியில் தேமுதிக இணைந்திருப்பதால் எடப்பாடி பழனிசாமி ஷாக் ஆகி உள்ளார். தவெகவும் இந்த முடிவால் அதிர்ச்சியில் உள்ளது.

## தொண்டி செய்யது முகம்மது அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில் 77 ஆம் ஆண்டு விழா



ராமநாதபுரம், பிப்.20–

ராமநாதபுரம் மாவட்டம் தொண்டி செய்யது முகம்மது அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளியின் 77 ஆம் ஆண்டு விழா சிறப்பாக நடைபெற்றது.

இவ் விழாவிற்கு பள்ளியின் தலைமை ஆசிரியர் தலைமை தாங்கினார். சிறப்பு விருந்தினராக சமூக சேவகர் பள்ளி மேலாண்மை குழு உறுப்பினர் சாதிக் பாட்ஷா, முன்னாள் மாணவர் ஹாரிஸ், மற்றும் நௌஃபால் மற்றும் அகம்மது சாத் பள்ளி மேலாண்மை குழு தலைவி ஹமீது பாத்திமா, பெற்றோர் ஆசிரியர் கழகத் தலைவி ஷர்மிளா மற்றும் பள்ளி மேலாண்மை குழு உறுப்பினர்கள் பெற்றோர்கள் கலந்து கொண்டனர். மாணவர்களுக்கு கலை நிகழ்ச்சி மற்றும் விளையாட்டுப் போட்டிகள் நடத்தப்பட்டு பரிசுகள் வழங்கப்பட்டன. பள்ளியின் முன்னாள் மாணவர் சாதிக்பாட்சா முன்னாள் மாணவர்கள் பலரும் பள்ளிக்கு தேவையான மாணவர்கள் நலனில் அக்கறையுடன் உதவி வருவதையும் நினைவுபடுத்தி பேசினார். முன்னாள் மாணவர்கள் பலர் நல்ல நிலையில் கல்வியாளர்கள் இருக்கிறார்கள் என்பதையும் வருங்காலத்தில் சிறப்பான முறையில் பள்ளி ஆண்டுவிழா நடக்கும் எனவும் பேசினார்.

பள்ளியின் ஆண்டு அறிக்கையை பள்ளியின் தலைமை ஆசிரியரும் விளையாட்டு அறிக்கையை முதுகலை ஆசிரியர் இனிகோ, வரவேற்பு உரையை ராமு ஆற்றினர். முதுகலை ஆசிரியர் இளையராஜா நன்றி கூறினார். நிகழ்ச்சிகளை பட்டதாரி ஆசிரியர் காளிராஜ் தொகுத்து வழங்கினார். பள்ளியின் கல்வி விளையாட்டில் சாதித்த மாணவர்களுக்கு ஆண்டுவிழாவில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு சான்றிதழ் பரிசு அளிக்கப்பட்டது.

## ஈரோடு ஆகாஷில் ஜேஇஇ தேர்வில் சாதனை படைத்த மாணவர்களுக்கு விருது



ஈரோடு, பிப். 20–

ஆகாஷ் கல்வி சேவைகள் லிமிடெட் (AESL) நிறுவனத்தின் 6 மாணவர்கள் யிணிணி மெயின் 2026 தேர்வில் (செஷன் 1) சாதனை படைத்துள்ளனர்.

பிப்ரவரி 16 அன்று வெளியிடப்பட்ட தேசிய தேர்வு முகமையின் (NTA) முடிவுகளின்படி, ஆகாஷ் இன்ஸ்டிடியூட் ஈரோடு மாணவர்கள் 6 ஜே இ இ மெயின் தேர்வில் சிறந்த மதிப்பெண்களை பெற்று உள்ளனர். சஞ்சய் 99.77 பர்சன்டைல்களுடன் முதலிடத்தைப் பிடித்தார். அதைத் தொடர்ந்து அதியன் ஆர் 98.53 நிகில் சிவானந்தன் 98.46

ராகுல் எஸ் 98.41 ஆராதனா விக்னேஷ் 98.05, அபினவ் கே 98.01 பர்சன்டைல்கள் பெற்றனர்.

AESL இன் கல்வி மற்றும் வணிகத் தலைவர் தீரஜ் குமார் மிஸ்ரா மற்றும் கிணிஷிலி அதிகாரிகள் குடே சஞ்சய் காந்தி, பிரதீப் உன்னிகிருஷ்ணன் மற்றும் கோபிநாத் ஆகியோர் கூறியதாவது: எங்கள் சென்னையைச் சேர்ந்த மாணவர் அஜய் (99.99 சதவீதம்) பெற்று தமிழக அளவில் முதலிடம் பெற்றார். இது ஆகாஷ் கல்வி முறையின் வலிமைக்கு ஒரு சான்றாகும்.

AESL நாட்டில் 400க்கும் மேற்பட்ட மையங்களைக் கொண்டுள்ளது, அவற்றில் 9 மையங்கள் தமிழ்நாட்டில் உள்ளன.

NIT மற்றும் IIIT இல் சேர்க்கை பெறுவதற்காக நாட்டில் சுமார் 13 லட்சம் மாணவர்கள் யிணிணி தேர்வை எழுதினர். உலகிலேயே கடினமான தேர்வான JEE அட்வான்ஸ்டு தேர்வில் தகுதி பெற்றவர்கள் IIT இல் சேர்க்கை பெறுகிறார்கள்.

இவ்வாறு அவர்கள் கூறினர்.

சாதனை படைத்த மாணவர்களை பாராட்டி விருதுகள் வழங்கப்பட்டன.

## ENROLLMENT NOTICE

After ten days of the publication of this notice and within Three Months thereafter.

I PAVITHRA S D/o. Sethu Aged 23Years, Permanently Residing at :D.No.1-104A, Kelatharu, chokkanathiruppu, Thirppuvanam taluka, Piramanur, Sivagangai District, Tamilnadu-630611.

Intend having my enrolment as an advocate moved before the Bar Council of Tamil Nadu and Puducherry, Bar Council Buildings High Court Campus, Chennai-600104. Those who have any valid objections may notify the same to the Bar Council within Ten days.

PAVITHRA S

## பள்ளி மற்றும் கல்லூரிகளில் போதைப்பொருள் விழிப்புணர்வு ஏற்படுத்திய திருப்பூர் மாவட்ட காவல்துறையினர்!



திருப்பூர், பிப்.20-

திருப்பூர் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் யாதவ் கிரிஷ் அசோக். அவர்களின் உத்தரவுப்படி மாவட்டம் முழுவதும் அவினாசி, பல்லடம், உடுமலை, தாராபுரம் மற்றும் காங்கேயம் உட்கோட்ட துணைக்காவல் கண்காணிப்பாளர்கள் மேற்பார்வையில் காவல்ஆய்வாளர் மற்றும் உதவி ஆய்வாளர்களால் அந்தந்த காவல்நிலைய எல்லைக்குட்பட்ட பள்ளி மற்றும் கல்லூரிகளில் மாணவ மாணவியர்களுக்கு போதை பொருள் பயன்படுத்துவதால் ஏற்படும் தீமைகள் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது.

-மாணவர்கள், ஆசிரியர்கள் மற்றும் காவல்துறையினர் ஆகியோர்களை உள்ளடக்கிய "வாட்ஸப் குழு" (Anti Drug Committee Whatsapp Group) அனைத்து பள்ளி மற்றும் கல்லூரிகளிலும் புதிதாக துவங்கப்பட்டு போதைப்பொருள் விற்பனை மற்றும் பயன்பாடு குறித்த தகவல்கள் பகிரவும், மற்றும் விழிப்புணர்வு ஏற்படுத்தவும் இக்குழு உருவாக்கப்பட்டுள்ளது.

இந்த விழிப்புணர்வு நிகழ்ச்சியில் மாவட்டம் முழுவதும் சுமார் 1500 மாணவ மாணவிகள் கலந்துகொண்டனர். விழிப்புணர்வு பதாகைகள் மற்றும் துண்டு பிரசுரங்கள் வழங்கப்பட்டு மாணவ மாணவிகளிடம் போதைப்பொருள் குறித்தும் அதனால் ஏற்படும் விளைவுகள் குறித்தும் எடுத்துரைக்கப்பட்டது.

## இந்திய பட்டயக் கணக்காளர் நிறுவனதின் 2026-27 ஆண்டிற்கான புதிய தலைமை தேர்வு



சென்னை, பிப்.20-

உலகின் மிகப்பெரிய கணக்கியல் தொழில் முறை அமைப்பான இந்திய பட்டயக் கணக்காளர் நிறுவனதின் 26வது கவுன்சில், 2026-27 ஆண்டிற்கான புதிய தலைவர் மற்றும் துணைத் தலைவரை தேர்தல் மூலம் தேர்வு செய்துள்ளது.

இதன்படி, சி.ஏ. பிரசன்ன குமார். டி அவர்கள் ஐசிஏஐ -யின் தலைவராகவும், சி.ஏ. மங்கேஷ் பாண்டுரங்க் கினாரே துணைத் தலைவராகவும் 2026 பிப்ரவரி 12ஆம் தேதி பொறுப்பேற்றுள்ளனர்.

புதிய தலைமைத்துவம், நிறுவனத்தின் தொழில் முறை மேம்பாடு, தரநிலைகள் வலுப்படுத்தல் மற்றும் மற்றும் உலகளாவிய அளவில் இந்திய கணக்காய்வு துறையின் மரியாதையை உயர்த்தும் நோக்கில் செயல்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

உங்கள் அபிமான
தின தமிழ்
செய்திகளை
Whatsapp - ல்
பின் தொடர

## தம்பட்டம் அடித்துக்கொள்ளும் தமிழக அரசு டாக்டர் சரவணன் திடுக்கிடும் குற்றச்சாட்டு!



மதுரை, பிப்ரவரி. 20-

மதுரை அதிமுக மருத்துவரணி இணைச் செயலாளர் டாக்டர் பா.சரவணன் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது.

தமிழ்நாடு அரசு மருத்துவமனைகளில் மருத்துவர்கள் எண்ணிக்கை பற்றாக்குறை பேராசிரியர்கள், முதுநிலை மருத்துவர்கள், மகப்பேறு உள்ளிட்ட பல்வேறு மருத்துவ இடங்களுக்கு கலந்தாய்வு நடத்தவில்லை நிலை இப்படி இருக்கையில் தமிழக அரசு மருத்துவமனைக்கு 3 மடங்கு மக்கள் வருகிறார்கள் என அமைச்சர் தனக்குத்தானே தம்பட்டம் அடித்து வருகிறார். மருத்துவத்துறையில் எடப்பாடியார் ஒரு சகாப்தம் படைத்தார் என்ற வரலாற்றை அமைச்சர் மா.சு.படித்து அறிந்து கொள்ள வேண்டும்

குறிப்பாக ஒரே ஆண்டில் 11 மருத்துவக் கல்லூரிகளை உருவாக்கி அதன் மூலம் தமிழகத்தில் கூடுதலாக 1,650 மருத்துவ இடங்களை உருவாக்கினார்,

மதுரை, தஞ்சை போன்ற மூன்று இடங்களில் மல்டி ஸ்பெஷாலிட்டி மருத்துவமனையை உருவாக்கினார். மதுரையில் எய்ம்ஸ் மருத்துவமனையை உருவாக்கினார். மருத்துவ இடங்களுக்கு 7.5 உள் ஒதுக்கீடு மூலம் இதுவரை 3,456 அரசு மாணவர்கள் பயன் பெற்றுள்ளார்கள்.

குறிப்பாக 2019 ஆண்டில் இந்தியா முழுவதும் ஒரு சர்வே எடுக்கப்பட்டது அதில் தமிழகத்தில் 253 மக்களுக்கு ஒரு மருத்துவர், டில்லியில் 334 மக்களுக்கு ஒரு மருத்துவர், கர்நாடகாவில் 507 மக்களுக்கு ஒரு மருத்துவர்,

கேரளாவில் 535 மக்களுக்கு ஒரு மருத்துவர், கோவாவில் 713 மக்களுக்கு ஒரு மருத்துவர், உத்திரப்பிரதேசத்தில் 767 மக்களுக்கு ஒரு மருத்துவர், சதீஸ்கரில் 338 மக்களுக்கு ஒரு மருத்துவர் ஆக தமிழகத்தில் தான் அதிக அளவில்

மருத்துவர்கள் உள்ள மாநிலமாக இருந்தது.

இந்த 5 ஆண்டுகளில் ஒரு மருத்துவக் கல்லூரியை கூட ஸ்டாலின் அரசு உருவாக்கவில்லை.தற்போது நோயாளிக்கு ஏற்றவாறு மருத்துவ பணியாளர்கள் இல்லை குறிப்பாக தற்போது 1.50 லட்சம் மருத்துவர்கள் பதிவு செய்துள்ளார்கள் ஆனால் தற்பொழுது தமிழகத்தில் 19,000 அரசு மருத்துவர்கள் தான் உள்ளார்கள். இதில் மருத்துவ எண்ணிக்கையை இரண்டு மடங்கு அதிகரித்தால்தான் சரி செய்ய முடியும். மேலும் 38 க்கும் மேற்பட்ட அரசு மருத்துவமனை கல்லூரிகள், 372 தாலுகா மருத்துவமனைகள், 2336 ஆரம்ப சுகாதார நிலையங்கள், 8713 சுகாதார மையங்கள் என 11,000 க்கும் மேற்பட்ட அரசு மருத்துவமனைகளில் 35,000 க்கும் மேற்பட்ட அரசு மருத்துவம னைகளில் காலி பணியிடங்கள் அம்மாவின் ஆட்சி காலத்தில் தான் நிரப்பப்பட்டது. ஆனால் இன்றைய நிலை என்ன? அமைச்சர் மா.சு. எதற்கெடுத்தாலும் அறிக்கை விடுகிறார் ஆனால் செயல்பாட்டில் ஒன்றும் இல்லை குறிப்பாக தமிழகத்தில் புறநோயாளிகள் 56 சதவீதம்,உள் நோயாளிகள் 43 சதவீதம், அறுவை சிகிச்சைகள் 60 சதவீதம் அதிகரிப்பதாக கூறுகிறார். தற்போது ஆண்டுக்கு, ஆண்டு மருத்துவர்கள் மற்றும் மருத்துவ பணியாளர்கள் ஒய்வு பெற்று வருகிறார்கள் அந்தப் பணியிடங்களுக்கு இன்னமும் நிரப்பப்படவில்லை

குறிப்பாக தனியார் மருத்துவமனைகளில் மகப்பேறு மருத்துவர்கள் பத்தாயிரம் பேர் உள்ளனர் ஆனால் அரசு மருத்துவமனையில் 1100 பேர் தான் உள்ளார்கள் தமிழகத்தில் ஒவ்வொரு ஆண்டும் 9 லட்சம் பிரசவங்கள் நடைபெறுகிறது இதில் 55 சதவீதம் அரசு மருத்துவமனையிலும், 45 சதவீதம் தனியார் மருத்துவமனையில் நடைபெறுகிறது. குறிப்பாக பெரும்பாலான ஆரம்ப சுகாதார நிலையங்களில் கர்ப்பிணி பெண்கள் சென்றால் அங்கு மகப்பேறு மருத்துவர்கள் இல்லை என்று மாவட்ட தலைமை மருத்துவமனைக்கு அனுப்பி விடுகிறார்கள். மருத்துவத்துறையில் எம்பிபிஎஸ் மருத்துவர்கள், எடி/எம் எஸ் (பிஜி) சிறப்பு மருத்துவர்கள், டிஎம்/எம்சிஹெச் உயர் சிறப்பு மருத்துவர்கள் ( சூப்பர் ஸ்பெஷாலிட்டி) என்று உள்ளனர். இதில் உயர் சிறப்பு மருத்துவர்கள் இல்லாத இடத்திற்கு, சிறப்பு மருத்துவர்களை நியமிக்கிறார்கள்

சில இடங்களில் உயர் சிறப்பு மருத்துவர்களை நியமித்தால் ஏற்கனவே நியமனம் செய்தவர்களை ரத்து செய்து அனுப்பி விடுகிறார்கள். தற்பொழுது நோயாளிகள் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது. சிறப்பு மருத்துவரை மாற்றம் செய்யாமல் இருந்தால் தான் சமாளிக்க முடியும் இதையெல்லாம் அரசு செய்ய தவறிவிட்டது.

மேலும் பேராசிரியர்கள், முதுநிலை மருத்துவர்கள்,மகப்பேறு மருத்துவர்களுக்கு கலந்தாய்வு செய்யாமல் அதில் ஊழல் நடைபெற்று வருவதாக மருத்துவர்கள் குற்றம் சாட்டி வருகிறார்கள் தற்பொழுது மருத்துவத்துறை நேர்மையான துறையாக இல்லாமல் ஊழல் துறையாக மாறிவிட்டது என்று குறிப்பிட்டுள்ளார்.



மதுரை மாவட்டம், கொட்டாம்பட்டி ஊராட்சி ஒன்றியம், பூதமங்கலம் ஊராட்சி, வேளாண் இயந்திமாக்குதல் திட்டத்தின் கீழ் ரூபாய்45000 மானியத்துடன் ரூபாய்75000 மதிப்பிலான பவர் டில்லர் பெற்று ஆதனை பயன்படுத்தி விவசாயம் செய்து வருவதை மாவட்ட ஆட்சித்தலைவர் கே.ஜே.பிரவீன் குமார் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.



மதுரை மாநகராட்சி அருள்மிகு பூங்கா முருகன் கோவில் சஷ்டி மண்டபத்தில் தமிழ்நாடு தூய்மைப் பணியாளர்கள் நல வாரியம் சார்பில் மாநகராட்சி தூய்மை பணியாளர்களுக்கு நலவாரிய அடையாள அட்டைகளை தமிழ்நாடு தூய்மை பணியாளர்கள் நலவாரியம் தலைவர் டாக்டர் திப்பம்பட்டி வெ.ஆறுச்சாமி வழங்கினார் அருகில் மாண்புமிகு துணை மேயர் / மேயர் (பொ) தி.நாகராஜன், உதவி நகர்நல அலுவலர் மரு.அபிஷேக் அவர்கள் மற்றும் மாநகராட்சி அலுவலர்கள் ஆகியோர் உடன் உள்ளனர்.

# டாக்டர் சரவணனிடம் கோரிக்கை மனு வழங்கிய பொதுமக்கள்!



மதுரை, பிப்ரவரி. 20-

மதுரை வடக்கு சட்டமன்ற தொகுதிக்கு உட்பட பந்தல்குடி மற்றும் மீனாட்சிபுரம் அம்பேத்கர் காலனி பகுதிகளில் 5,000-க்கும் மேற்பட்ட பட்டியல் சமூக மக்கள் வசித்து வருகின்றனர், பந்தல்குடி வாய்க்கால் ஓரங்களிலும், வாடகை வீடுகளிலும் வசித்து வரக்கூடிய இம்மக்களுக்கு இலவச வீட்டு மனை பட்டா வழங்க வேண்டும் என்பது இவர்களது நீண்ட நாள் கோரிக்கையாகும், சமீபத்தில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் ஒரு இலட்சம் பேருக்கு பட்டா வழங்கிய நிகழ்வில் கூட இவர்களில் ஒருவருக்கு கூட வீட்டுமனை பட்டா வழங்கவில்லை,

அத்துடன் ஏற்கனவே கடந்த 30 ஆண்டுகளுக்கு முன் இலவச வீட்டுமனை பட்டாக்களை பெற்றவர்கள் இப்போது அதனை தங்களது பெயரில் பத்திரம் பதிவதற்கு 11% முத்திரை மற்றும் பதிவுக் கட்டணம் செலுத்த வேண்டியுள்ளது என்றும், பட்டிய லின மக்களின் வறுமை நிலையை கணக்கில் கொண்டு இந்த பதிவுக் கட்டணத்தில் சலுகை வேண்டும் எனவும் தொடர்ந்து கேட்டு வருகின்றனர்.

இதனையடுத்து மேற்கண்ட கோரிக்கைகளை அதிமுக பொதுச் செயலாளர், எடப்பாடியாருக்கு கொண்டு செல்லும் நோக்கத்தோடு மருத்துவ அணி இணைச் செயலாளர் டாக்டர் சரவணன் அப்பகுதிக்கு நேரில் சென்று பொதுமக்களை சந்தித்து தங்களுடைய கோரிக்கைகளை மற்றும் சிரமங்களையும் கேட்டறிந்து, ஏழை எளிய பட்டியல் சமூக மக்களின் கோரிக்கைகளை எடப்பாடியாரின் கவனத்துக்கு கொண்டு சென்று உரிய தீர்வு காண இயன்ற உதவிகளை செய்வதாக தெரிவித்தார்.

# ரோபோ சங்கரின் மனைவி மகள் ராமநாதசுவாமி கோவிலில் தரிசனம்



இராமேஸ்வரம், பிப்.20–

நடிகர் ரோபோ சங்கரின் மனைவி மற்றும் மகள் மருமகன் ஆகியோர் ராமேஸ்வரம் வருகை தந்து ராமநாதசுவாமி கோவிலில் தீர்த்தங்களில் நீராடி, சுவாமி தரிசனம் செய்தனர்.

இராமநாதபுரம் மாவட்டம் ராமேஸ்வரம் ராமநாத சுவாமி கோவில் தீர்த்தம், மூர்த்தி, ஸ்தலம் என்ற மூன்று பெருமைகளையும் கொண்ட கோவிலாக உள்ளது. மேலும், பாவங்களை போக்கும் புண்ணிய ஸ்தலமாக இருப்பதால் நாட்டின் பல்வேறு மாநிலங்களில் இருந்து தினமும் நூற்றுக்கணக்கான சுற்றுலா பயணிகள் வந்து செல்கின்றனர். இறந்த முன்னாள் நகைச்சுவை நடிகர் ரோபோ சங்கரின் மனைவி மற்றும் மகள் ராமேஸ்வரம் வந்து அக்னி தீர்த்தம் கடல் ராமநாதசுவாமி கோவிலுக்கு உள்ள 22 புனித தீர்த்தங்களில் நீராடி, ராமநாதசுவாமி – பர்வதவர்த்தினி அம்மனை சுவாமி தரிசனம் செய்து சென்றனர். காசிக்கு சென்று விட்டு ராமநாதசுவாமியை தரிசனம் செய்ய வந்ததாக தெரிவித்தனர். கோவிலுக்கு வருகை தந்த ரோபோ சங்கரின் குடும்பத்தை கண்டதும் பக்தர்கள் அவர்களுடன் குடும்பத்துடன் நின்று புகைப்படம் எடுத்து மகிழ்ந்தனர்.




# குமரி மாவட்ட விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம்



நாகர்கோவில், பிப்.20-

கன்னியாகுமரி மாவட்ட ஆட்சியர் அலுவலக நாஞ்சில் கூட்டரங்கில் விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் ஆர்.அழகுமீனா தலைமையில் நடைபெற்றது.

மாவட்ட ஆட்சித்தலைவரின் நேர்முக உதவியாளர்(விவசாயம்) அணைகளில் நீர்நிலை மற்றும் மழை விபரங்கள் குறித்து தெரிவித்தார். விவசாயிகளின் முக்கியமான கோரிக்கைகள் விவாதிக்கப்பட்டது. கன்னியாகுமரி மாவட்டத்தில் நெற்பயிருக்கு கூடுதலாக மார்ச் 1 முதல் 15 வரை தண்ணீர் தேவை என விவசாயிகள் கேட்டுக்கொண்டதற்கிணங்க தண்ணீர் திறந்துவிட தேவையான நடவடிக்கைகள் மேற்கொண்ட மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களுக்கும், வேளாண்மை இணை இயக்குநர் றற்றும் செயற்பொறியாளர் நீர்வளத்துறைக்கும் விவசயிகள் சார்பாக நன்றி தெரிவிக்கப்பட்டது.

கன்னியாகுமரி மாவட்டத்தில் திருப்பதிசாரத்தில் உள்ள நெல் ஆராய்ச்சி நிலையத்தில் கன்னிப்பூ மற்றும் கும்பப்பூ பருவங்களுக்கான புதிய நெல் ரகங்கள் வெளியிட தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ள கேட்டுக்கொள்ளப்பட்டது.

தென்னையை பாதிக்கும் வெள்ளை ஈக்களை கட்டுப்படுத்த தேவையான ஒட்டுண்ணிகள் திருப்பதிசாரம் ஆராய்ச்சி நிலையத்தில் உற்பத்தி செய்திட மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளுக்கு விவசாயிகள் நன்றி தெரிவித்தனர்.

இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையம் மற்றும் ரயில்வே துறை பணிகளால் பாதிப்படைந்துள்ள நீர்நிலைகளை சீரமைத்திட நீர்வளத்துறை மூலம் இரண்டு பொறுப்பு அலுவலர்கள் நியமிக்கப்பட்டு அனைத்து சீரமைப்பு பணிகளும் விடுபாடில்லாமல் மேற்கொள்ளப்படுவதை உறுதி செய்திட நீர்வளத்துறைக்கு மாவட்ட ஆடசியர் அறிவுறுத்தினார்.

கூட்டத்தில் மாவட்ட வருவாய்அலுவலர் பூங்கோதை,, வேளாண்மை இணை இயக்குநர் எம்.. ஆர்.வாணி, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர்(விவசாயம்) எஸ்.கீதா, நீர்வளத்துறை செயற்பொறியாளர் வசந்தி. சார் ஆட்சியர் பத்மநாபபுரம் திரு.வினய்குமார்மீனா, மற்றும் மாவட்டத்தின் முன்னோடி விவசாயிகள் கலந்துகொண்டனர்.






மதுரை மாவட்டம், கொட்டாம்பட்டி ஊராட்சி ஒன்றியம், பூதமங்கலம் ஊராட்சி, வேளாண் இயந்திமாக்குதல் திட்டத்தின் கீழ் ரூபாய்45000 மானியத்துடன் ரூபாய்75000 மதிப்பிலான பவர் டில்லர் பெற்று ஆதனை பயன்படுத்தி விவசாயம் செய்து வருவதை மாவட்ட ஆட்சித்தலைவர் கே.ஜே.பிரவின் குமார் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

# டாக்டர் அகர்வால்ஸ் கண் மருத்துவமனையில் உலகின் முதல் நவீன கண் அறுவை சிகிச்சை




சென்னை, பிப்.20-

டாக்டர் அகர்வால்ஸ் கண் மருத்துவமனை மும்பையைச் சேர்ந்த 44 வயதான பெண்கள் நல மருத்துவருக்கு பார்வையை மீட்டுள்ளது. கடந்த 10 ஆண்டுகளாக கடுமையான குளுக்கோமா மற்றும் கண் தொடர்பான சிக்கல்களால் இரண்டு கண்களிலும் படிப்படியாக பார்வைத்திறன் குறைந்து, 2024-ல் முற்றிலுமாக பார்வையை இழந்திருந்தார். இதற்கு முன் பல அறுவை சிகிச்சைகள் செய்தும் பலன் கிடைக்காத நிலையில், டாக்டர் அகர்வால்ஸ் மருத்துவமனை இந்தச் சாதனையை நிகழ்த்தியுள்ளது.

இது உலகளவில் முதன் முறையாக வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்ட ஒரு மிகச் சிக்கலான அறுவை சிகிச்சை நிகழ்வாக கருதப்படுகிறது. நோயாளியின் இடது கண்ணில் ஏற்கனவே தவறான வகையில் பொருத்தப்பட்டிருந்த செயற்கை லென்ஸை மருத்துவர்கள் அகற்றினர். பின்னர், '5எஃப்- ஐ.எஸ்.எல்.எஃப்' எனும் நவீன உத்தியின் வழியாக, புதிய லென்ஸ் பொருத்தப்பட்டது. இதனுடன் கண்களின் முழுமையான குறைபாடுகளை சரிசெய்வதற்காக, கருவிழி மாற்று சிகிச்சை மற்றும் கண் பாவை சீரமைப்பு ஆகியவையும் ஒரே சிகிச்சை அமர்வில் செய்யப்பட்டன.

இந்த செய்தியாளர் சந்திப்பில் டாக்டர். அகர்வால்ஸ் கண் மருத்துவமனை குழுமத்தின் கண்புரை மற்றும் கண் அழுத்தச் சேவைகளின் மூத்த ஆலோசகர் டாக்டர். சூசன் ஜேக்கப், மருத்துவச் சேவைகள் மண்டலத் தலைவர் டாக்டர் சௌந்தரி மற்றும் விட்ரியோ ரெடினா துறையின் கிளினிக்கல் லீட் மற்றும் தலைவருமான டாக்டர் மனோஜ் காத்ரி ஆகியோர் கலந்து கொண்டனர்.

இதுகுறித்து டாக்டர் அகர்வால்ஸ் முதுநிலை கண்சிகிச்சை நிபுணர் டாக்டர் அஸ்வின் அகர்வால் கூறுகையில், " அதிக சிக்கலான ஒரு பாதிப்பு நேர்வுக்கான, பல அறுவை சிகிச்சை அணுகுமுறைகள் இதற்கு தேவைப்பட்டன. கண்ணின் சிதைந்த அமைப்பை சீரமைத்தல், புதிய லென்ஸை பாதுகாப்பாக பொருத்துதல் எனப் பல சிகிச்சைகளை ஒரே நேரத்தில் செய்ய வேண்டியிருந்தது. எங்கள் மருத்துவக் குழுவின் ஒருங்கிணைந்த நிபுணத்துவமும், சிறப்பான கட்டமைப்பு வசதிகளும் இதை சாத்தியமாக்கியது." என்று தெரிவித்தார்.

சாதனை முயற்சியான இந்த அறுவை சிகிச்சையை மேற்கொண்ட டாக்டர் சூசன் ஜேக்கப் கூறுகையில், "நோயாளிக்கு 2010-லிருந்தே குளுக்கோமா பிரச்சனை இருந்தது. கண் புரைக்கான அறுவை சிகிச்சை மற்றும் தாங்கு திசு நீக்கல் சிகிச்சை போன்றவற்றை பிற மருத்துவமனைகளில் செய்து கொண்ட போதிலும், அவரது பார்வைத்திறன் குறைந்து கொண்டே போனது. ஏறக்குறைய பார்வைத்திறனை முழுமையாக இழந்த நிலையில் அவர் எங்களிடம் சிகிச்சைக்கு வந்தார். அவருக்குப் பொருத்தப்பட்டிருந்த பழைய லென்ஸ் நகர்ந்து, கண்ணின் மற்ற பகுதிகளை அழுத்தியதே இதற்கு முக்கிய காரணம். நாங்கள் அந்த லென்ஸை அகற்றி, '5 எஃப்- ஐ.எஸ். எல்.எஃப்' முறையில் புதிய லென்ஸைப் பாதுகாப்பாகப் பொருத்திப் பார்வையை மீட்டோம்," கூறினார்.

# மதுரை புதூர் அரசினர் தொழிற்பயிற்சி நிலையத்தில் தொழிற்பழகுநர் சேர்க்கை முகாம்

மதுரை, பிப்.20-

மதுரை மண்டலத்தில் 10 th, 12 th, ITI, பாலிடெக்னிக், மற்றும் பொறியியல் கல்லூரிகளில் பயின்று தேர்ச்சி பெற்ற மாணவர், மாணவியர்களுக்கு தொழிற்பழகுநர் பயிற்சிக்கான மண்டல அளவிலான தொழிற்பழகுநர் சேர்க்கை முகாம் {Trade Apprentices Engagement Fair (TAEF) & 2026} மதுரை புதூர் அரசினர் தொழிற்பயிற்சி நிலையத்தில் நடைபெற்றது. இந்த முகாமில் மதுரை, சிவகங்கை, திண்டுக்கல், தேனி மற்றும் ராமநாதபுரம் மாவட்டத்தை சேர்ந்த அரசு மற்றும் தனியார் துறையைச் சார்ந்த பல முன்னணி தொழில் நிறுவனங்கள் கலந்து கொண்டு தங்களது நிறுவனங்களுக்கு தேவையான தொழில்பழகுநர்களை தேர்வு செய்தனர்.

இதில் கலந்து கொண்ட மாணவ மாணவியர்கள் கல்விச் சான்றிதழ்கள், சாதிச் சான்றிதழ், ஆதார் அடையாள அட்டை மற்றும் பாஸ்போர்ட் அளவு புகைப்படம் ஆகியவற்றுடன் வந்து கலந்து கொண்டனர் மேலும் பயிற்சியாளர்களுக்கு மாதந்தோறும் உதவித் தொகை ரூபாய் 10,560/- முதல் 15,000/ வரை வழங்கப்படும் என்பது குறிப்பிடத்தக்கது.

மேலும் பயிற்சியின் முடிவில் தேசிய தொழிற்பழகுநர் சான்றிதழும் வழங்கப்பட்டது . இதற்கான ஏற்பாடுகளை மதுரை மாவட்ட திறன் பயிற்சி அலுவலக உதவி இயக்குனர் மேற்பார்வையில் சிறப்பாக செய்திருந்தனர்.

# குமரியில் வருட கணக்கில் மண் கொள்ளைக்கு அனுமதி அளித்த கனிமவளத்துறை!

## விவசாய குறைதீர் கூட்டத்தில் கலெக்டரிடம் புகார்



நாகர்கோவில், பிப்.20-

குமரி மாவட்டம் வெள்ளமோடி மற்றும் குழித்துறை அருகே பாலவிளை உட்பட பல்வேறு இடங்களில் சட்ட விரோதமாக ஒரு வருடம் மண் எடுக்க குமரி மாவட்ட கனிம வளதுறை உதவி இயக்குநர் அனுமதி அளித்துள்ளது பெரும் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது. அங்கு உள்ள மலை குன்று அழிக்கப்பட்டு அதில் இருந்த பாறைகளும் மற்றும் விவசாயத்திற்கு செல்லும் கால்வாய் பகுதிகளும் உடைக்கப்பட்டு வருகிறது.

குறிப்பாக ஒரு டெம்போ மண் எடுக்க 600 ரூபாயை ஒரு வெளியூர் கும்பல் ஒன்று குழுவாக இருந்து வசூலித்து வருவதாகவும் கூறப்படுகிறது. குளங்களில் இருந்து வண்டல் மண் எடுக்க கூட கடுமையான சட்ட விதிகளை பின்பற்றி மாவட்ட ஆட்சியரின் உத்தரவு பெற வேண்டி இருக்கும் நிலையில், சுற்று சூழல் அனுமதி இன்றி மலை குன்று பகுதியை முழுமையாக அழித்து அதில் இருந்து சட்ட விரோதமாக மண் கொள்ளை நடத்த மாவட்ட கனிமவளத்துறை உதவி இயக்குனரே மாவட்ட ஆட்சியரின் அனுமதி பெறாமல் மாவட்ட ஆட்சியரின் கவனத்திற்கு கொண்டு செல்லாமல் ரகசியம் காத்து வருட கணக்கில் மண் எடுத்துக் கொள்ள அனுமதி அளித்துள்ளது பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது .

மேலும் எந்த அனுமதியும் இன்றி அதில் இருந்த பாறைகளையும் உடைத்து எடுத்து சட்ட விரோதமாக பாறைகளையும் உடைத்து கால்வாய்களையும் அழித்து மண் கடத்தி வருகின்றனர். இதற்கு பெரும் லஞ்சம் கை மாறி உள்ளதாக கூறப்படுகிறது.

சாதாரணமாக 5 சென்ட் 10 சென்ட் இடங்களில் வீடு கட்டுவதற்கு நிலத்தை சரிசமன் செய்ய அனுமதி கேட்கும் போது மிக கடினமான சட்ட வழிமுறைகளை பின்பற்றும் கனிமவளத்துறை பெரும் மண் கொள்ளை நடத்த விதிகளை தளர்த்தி பெருமளவு லஞ்சம் பெற்று அனுமதி வழங்கி உள்ளதாக கூறப்படுகிறது.

இது குறித்து மாவட்ட ஆட்சியர் தலைமையில் நடைபெற்ற விவசாயிகள் குறைதீர் கூட்டத்தில் புகார் எழுப்பப்பட்டு உள்ளது. இது சம்பந்தமாக மாவட்ட ஆட்சியரின் கவனத்திற்கும் கொண்டு செல்லப்பட்ட நிலையில் அமைச்சர்கள் மற்றும் குமரி மாவட்டத்தில் உள்ள உயர் அதிகாரிகள் ஆகியோருக்கு லஞ்சம் கொடுப்பதற்காக பணம் பெறுவதாக மேற்படி பணம் வசூல் செய்யும் கும்பல் கூறியதாகவும் அந்த குற்றச்சாட்டுகளை கேட்டு மாவட்ட ஆட்சியர் அதிர்ச்சி அடைந்து கனிமவளத்துறை அதிகாரிகளிடம் விபரங்கள் கேட்டுள்ளதாக கூறப்படுகிறது.

இதுகுறித்து விவசாய சங்கங்கள் தற்போது வரும் 24ம் தேதி குமரி மாவட்டத்திற்கு வர இருக்கும் தமிழக முதல்வரிடம் நேரில் மண் கொள்ளை குறித்து முறையிடுவது என தீர்மானிக்கப்பட்டதாகவும் பரபரப்பு தகவல்கள் வெளியாகி உள்ளது.

# நீலகிரி மாவட்டத்தில் தோட்டக்கலை வளர்ச்சி திட்டம்



ஊட்டி, பிப். 20-

நீலகிரி மாவட்டத்தில் தோட்டக்கலை வளர்ச்சி திட்டம் எஸ் எச் டி எஸ் ன் கீழ் அங்கக வேளாண்மையை ஊக்குவிக்கும் வகையில் காய்கறி மற்றும் பழம் சாகுபடிக்கான தொழில்நுட்ப பயிற்சிகள் உதகை வட்டாரத்திற்கு சார்ந்த அனைத்து கிராமங்களுக்கும் வழங்கப்பட உள்ளது என்பதனை தோட்டக்கலை உதவி இயக்குனரின் ஏற்பாட்டால் முதல் கட்டமாக இத்தலார் கிராமத்தின் விவசாயிகளுக்கு தொழில் நுட்ப பயிற்சி வழங்கப்பட்டது இப் பயிற்சியில் இத்தலார் ஊர் தலைவர் முன்னிலை முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் முன்னுரை வழங்கியப்பின்னர் தோட்டக்கலை துணை இயக்குனர் திட்டங்களைப் பற்றி சிறப்புரை ஆற்றினார் மேலும் தோட்டக்கலை துறை சார்ந்த அலுவலகம் மண் பரிசோதனை நிலையம் வேளாண்மை பொறியியல் துறை கால்நடைத்துறை வேளாண் ஆராய்ச்சி நிலையம் பயிர் காப்பீடு நிறுவனம் போன்ற துறையை சார்ந்த அலுவலர்கள் மேலும் தமிழ்நாடு தோட்டக்கலை இயற்கை வேளாண்மை சங்கம் டி எச் ஓ எப் ஏ' நீலகிரி மாவட்ட செயலாளர் கலந்துகொண்டு தங்களின் திட்டங்களைப் பற்றி விவசாயிகளுக்கு தொழில்நுட்ப பயிற்சிகள் வழங்கப்பட்டது இதில் நூற்றுக்கும் மேற்பட்ட விவசாயிகள் கலந்து கொண்டு பயிற்சி நோக்கங்களை கற்றுக் கொண்டனர்.



# செங்கமலநாச்சியார்புரம் ஊராட்சி ஒன்றியம் விருதுநகர் மாவட்டம்



**பிளாஸ்டிக் பொருட்களை தவிர்ப்போம்.**
**மஞ்சள் பைகளை உபயோகிப்போம்.**
**தண்ணீரையும், மின்சாரத்தையும் சிக்கனமாக பயன்படுத்துங்கள்.**
**வீட்டையும் பொது இடத்தையும் சுத்தமாக வைத்திருங்கள்.**

உயர்திரு. **மரு என்.ஓ. சுகபுத்ரா**
மாவட்ட ஆட்சித்தலைவர்,
விருதுநகர் மாவட்டம்

உயர்திரு.**வீ.கேசவதாசன்** பி.ஏ.,
இணை இயக்குநர்/திட்ட இயக்குநர் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை விருதுநகர் மாவட்டம்

உயர்திரு.**செ.முருகன்**
உதவி இயக்குநர் ( ஊராட்சிகள் மற்றும் தணிக்கை)
விருதுநகர் மாவட்டம் மேற்கு

திரு.**P.பாண்டீஸ்வரன்**
வட்டார வளர்ச்சி அலுவலர்

திருமதி.**க.மீனாட்சி**
ஆணையாளர்

திரு.**து.ரவி** ஊராட்சி செயலர்



# சாமிநத்தம் ஊராட்சி ஒன்றியம் விருதுநகர் மாவட்டம்

**அவசர உதவிக்கு 1077-ஐ தொடர்பு கொள்ளவும்**

**அரசு மருத்துவமனையை அணுகுவீர்! அச்சத்தை தவிப்பீர்!!**

பேரூராட்சி பகுதியில் பிளாஸ்டிக் பொருட்கள் பயன்படுத்த தடை செய்யப்பட்டுள்ளதால் பொதுமக்கள் துணிப்பைகளை பயன்படுத்தி பேரூராட்சி நிர்வாகத்திற்கும், வியாபாரிகளுக்கும் ஒத்துழைப்பு வழங்க வேண்டுமென கேட்டுக் கொள்ளப்படுகிறது.

**துணிப்பையை கையில் எடுப்போம்!**
**பிளாஸ்டிக் பையை தவிர்த்திடுவோம்!!**
**சுற்றுச்சூழலை பாதுகாப்போம்**

உயர்திரு. **மரு என்.ஓ. சுகபுத்ரா**
மாவட்ட ஆட்சித்தலைவர்,
விருதுநகர் மாவட்டம்

உயர்திரு.**வீ.கேசவதாசன்** பி.ஏ.,
இணை இயக்குநர்/திட்ட இயக்குநர் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை விருதுநகர் மாவட்டம்

உயர்திரு.**செ.முருகன்**
உதவி இயக்குநர் ( ஊராட்சிகள் மற்றும் தணிக்கை)
விருதுநகர் மாவட்டம் மேற்கு

திரு.**P.பாண்டீஸ்வரன்**
வட்டார வளர்ச்சி அலுவலர்

திருமதி.**க.மீனாட்சி**
ஆணையாளர்

திரு.**சே.பாண்டி**
ஊராட்சி செயலர்



# ஆனையூர் ஊராட்சி ஒன்றியம் விருதுநகர் மாவட்டம்

பேரூராட்சி பகுதியில் பிளாஸ்டிக் பொருட்கள் பயன்படுத்த தடை செய்யப்பட்டுள்ளதால் பொதுமக்கள் துணிப்பைகளை பயன்படுத்தி பேரூராட்சி நிர்வாகத்திற்கும், வியாபாரிகளுக்கும் ஒத்துழைப்பு வழங்க வேண்டுமென கேட்டுக் கொள்ளப்படுகிறது.

**டெங்கு காய்ச்சலை தடுக்க**

- ஏடிஎஸ் கொசு உருவாக்குவோம் தேவையற்ற பொருட்களை அகற்றிவிடுவோம்.
- தண்ணீர் சேமித்து வைக்கும் தொட்டிகளை மூடி பாதுகாப்போம்.
- காய்ச்சல் அறிகுறி உள்ளவர்கள் அருகில் உள்ளஅரசு மருத்துவமனையை உடனடியாக அனுகவும்.




**துணிப்பையை கையில் எடுப்போம்! பிளாஸ்டிக் பையை தவிர்த்திடுவோம்!! சுற்றுச்சூழலை பாதுகாப்போம்**

உயர்திரு. **மரு என்.ஓ. சுகபுத்ரா**
மாவட்ட ஆட்சித்தலைவர்,
விருதுநகர் மாவட்டம்

உயர்திரு.**வீ.கேசவதாசன்** பி.ஏ.,
இணை இயக்குநர்/திட்ட இயக்குநர் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை விருதுநகர் மாவட்டம்

உயர்திரு.**செ.முருகன்**
உதவி இயக்குநர் ( ஊராட்சிகள் மற்றும் தணிக்கை)
விருதுநகர் மாவட்டம் மேற்கு

திரு.**P.பாண்டீஸ்வரன்**
வட்டார வளர்ச்சி அலுவலர்

திருமதி.**க.மீனாட்சி**
ஆணையாளர்

திரு.**ச.பாலசுப்பிரமணியன்**
ஊராட்சி செயலர்



# அனுப்பன்குளம் ஊராட்சி ஒன்றியம் விருதுநகர் மாவட்டம்

**சுற்றுப்புறச் சூழலை தூய்மையாக வைப்போம்! கொசுக்கள் உற்பத்தி ஆகாமல் தடுப்போம்!**

**டெங்கு காய்ச்சலை தடுக்க**

- ஏடிஎஸ் கொசு உருவாக்குவோம் தேவையற்ற பொருட்களை அகற்றிவிடுவோம்.
- தண்ணீர் சேமித்து வைக்கும் தொட்டிகளை மூடி பாதுகாப்போம்.
- காய்ச்சல் அறிகுறி உள்ளவர்கள் அருகில் உள்ளஅரசு மருத்துவமனையை உடனடியாக அனுகவும்.




உயர்திரு. **மரு என்.ஓ. சுகபுத்ரா**
மாவட்ட ஆட்சித்தலைவர்,
விருதுநகர் மாவட்டம்

உயர்திரு.**வீ.கேசவதாசன்** பி.ஏ.,
இணை இயக்குநர்/திட்ட இயக்குநர் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை விருதுநகர் மாவட்டம்

உயர்திரு.**செ.முருகன்**
உதவி இயக்குநர் ( ஊராட்சிகள் மற்றும் தணிக்கை)
விருதுநகர் மாவட்டம் மேற்கு

திரு.**P.பாண்டீஸ்வரன்**
வட்டார வளர்ச்சி அலுவலர்

திருமதி.**க.மீனாட்சி**
ஆணையாளர்

திருமதி.**பா.சத்தியாதேவி**
ஊராட்சி செயலர்

**DHINA TAMIL DAILY** : Published and Printed By Rajasingh, Published from 16 C, 246 Cross, Professor Joseph Street, Simon Nagar, Nagercoil - 629001.
Printing at Sree Murugan Printers, 209/A, Vaithyanathapuram, Kottar Post, Nagercoil - 629002. Ph : 99944 66200. Editor : Rajasingh. All Claims are subject to the Nagercoil Jurisdiction.